# அரும்பு

## 15வது ஆண்டுமலர்

# Jubileumsblad

15 år


**Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter - STAVANGER**

1992-2007

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

- திருமூலர் நாயனார்

**வெளியீடு**



**-மாணவர்கள்**
**-ஆசிரியர்கள்**
**-பெற்றோர்கள்**

***2007***

**இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை**



# முகவுரை

தமிழ்க்கல்வியையும், கலாச்சாரத்தையும், நோர்வேஜிய மக்களுடன் ஒப்புரவாதலையும் வளர்க்கும், இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை பதினைந்தாம் ஆண்டை பூர்த்திசெய்வது, மகிழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் உரியது.

இப் பாடசாலைக்கு அத்திவாரமிட்ட நல்ல உள்ளங்களுக்கும், அதனை பேணி வளர்த்து வரும் பெற்றோருக்கும் நன்றி கூறுவது, எமது கடமையாகிறது.

தாயகத்திலிருந்து சிதறிய எமக்கு, எமது மொழியையும், கலாச்சாரத்தையும் காக்க, வாய்ப்பளித்த நோர்வேஜியன் மக்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

இப் பயிலகத்தின், கடந்த பதினைந்து ஆண்டுகளின் பாதச்சுவடுகளை பதிவேடு செய்து, உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை, பல்லாண்டு காலம் நிலைத்து ஓங்கி வளர வாழ்த்துகிறோம்.



Det er et stort øyeblikk for oss alle at Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter i år feirer femten års jubileum.

Organisasjonen har lagt vekt på at tamilske barn og unge skal ta del i og forstå våre unike kulturelle verdier samt mestre det tamilske språket. I tillegg er det viktig å påpeke at det har vært en særdeles viktig oppgave for oss å jobbe med å øke integrasjonen i det norske samfunnet.

Vi ønsker å vise takknemlighet for de som grunnla denne organisasjonen og foreldrenes ubetalelige innsats. Det norske samfunnet må også få sin takk fordi de oppmuntrer oss til å undervise i vårt språk og praktisere vår kultur.

Vi håper at denne organisasjonens prinsipper og verdier vil fortsette å være et viktig hjelpemiddel for tamilske barn i mange år fremover.

-Marcus.R.Marianayagam
Leder

# Forord

# Fakta

**Medlemmer** : 100 medlemmer (2007)

**Elever** : 50 elever, aldresgruppe 3-17 år

**Drift** : Driftes av medlemskontingent og støtte fra Rogaland fylkeskommune

**Aktiviteter** : Morsmålsundervisning, undervisning i tamilsk kultur, leksehjelp, temakvelder og idrett

**Sted** : Gautesete Skole, Heddeveien 143, Stavanger

**Tidspunkt** : Fredager_kl.1700-1900,Lørdager_kl. 1045-1315

Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter i Stavanger skal styrke bevisstheten blant barn og ungdom med tamilsk bakgrunn om kunnskap / verdier slik at det former holdninger og handlinger i forhold til det norske samfunnet

**KUNNSKAP ■ KULTUR ■ TOLERANSE ■ RESPEKT**

# Visjon





# Gratulasjon

Kjære tamilske elever og foreldre !
Hjertelig tillykke med jubileet!!

Jeg synes det er utrolig flott at dere har drevet skole og aktivitet for tamilske barn i så mange år. Det står respekt av et slikt engasjement, og vi vet veldig godt at de fleste av dere stiller opp etter endt skoledag og etter endt arbeidsdag.

Vi på Gautesete skole ønsker å arbeide i kulturelt og språklig mangfold.
Vi er ikke opptatt av integrering, men av aksept, respekt og toleranse.
Fred og forståelse oppnås vi dersom vi leter etter likheter og respekterer ulikheter.

Jeg gratulerer dere med fortiden og ønsker dere tillykke med framtiden.

Med vennlig hilsen

Torunn Steensland Dahle
Rektor Gautesete skole









# Gratulasjon

Rogaland fylkeskommune arbeider for å skape et samfunn som rommer et flerkulturelt mangfold med etnisk likestilling i utdanning, arbeidsliv og samfunnsliv. Samarbeidet med de frivillige innvandrerorganisasjoner er viktig for å fremme en god utvikling i forhold til likeverdig deltakelse i samfunnet.

Tamilsk forening er en av mange innvandrerorganisasjoner som gjennom flere år har arbeidet for integrering. Rogaland fylkeskommune takker for samarbeid, og vi vil gratulere med 15 - års jubileum for Tamilsk barne- og ungdomsaktivitetssenter. Lykke til i det videre utviklingsarbeidet!

Med hilsen
Egil Harald Grude
Fylkeskultursjef
Rogaland Fylkeskommune

ROGALAND
FYLKESKOMMUNE





# வாழ்த்துச் செய்தி

அன்பு ஆசிரியர்களே, மாணவ மாணவிகளே, பாடசாலை நிர்வாகத்தினரே மற்றும் பெற்றோர்களே

இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை 15 வது வருடத்திற்குள் கால்பதிக்கின்ற இவ்வேளையிலே, மகிழ்ந்திருக்கின்ற இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை குழுமத்திற்கு நானும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி மனிதனுடைய வாழ்வில் அடிப்படையான ஒன்றாக கருதப்படுகிறது. எந்த இனத்தவரும், எந்த மொழியினரும், எந்த வயதினரும் கல்வி பெற உரிமையுண்டு. இக்கல்வி ஒருவரது வாழ்க்கை இலக்கை படம் போட்டுக்காட்டுகிறது. கல்வியானது கற்போரின் நாட்டின் பண்பாட்டிற்கும், பண்பிற்கும், மரபுகளுக்கும், பால்வேறுபாட்டிற்கும் ஒத்ததாக அமைதல் வேண்டும். அத்தோடு கல்வியும் கல்விக்கூடமும் உலகில் உண்மையான ஒற்றுமையையும் அமைதியையும் வளர்க்க உதவுகிறது.

மனிதரின் இறுதிக்குறிக்கோளை கண்முன் கொண்டு அவர்களை சமுதாயத்தில் நற்பண்புள்ள பிரஜைகளாக உருவாக்குவதே உண்மையான கல்வியின் நோக்கமாகும்.

இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை இன்று 15 வது வருடத்திற்குள் காலடி பதிக்கின்றபோது உயர்ந்த மகிழ்ச்சியைக் கொணர்கின்றது. மேலும் இக்கல்விக்கூடத்தின் பணி சிறக்கவும், பொது நோக்குக்கொண்டு பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் நல்உருவாக்கத்தைப் பெறுகின்ற மாணவ மாணவிகளையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

- அருட்தந்தை. ஜெகத் பிறேமநாத் அ.ம.தி

# அன்றும்

இஸ்ரவங்கர் மாநகரில் முதன் முதலில் வணபிதா இருதயநாதரின் முயற்ச்சியில் புனித சிவித்தூண் தேவாலைய மண்டபத்தில் தமிழ் மொழி கற்பிக்கப்பட்டு வந்து, நின்றுபோய்விடவே இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஈழத் தமிழர் சங்கம் றூகலாண்டின் அங்கத்தவர்களின் ஆக்கபூர்வமான முயற்சியினால் 1992ம் ஆண்டு உதயமாகியதே தமிழ்ச் சிறுவர் பாடசாலையாகும்.

தமிழ்ச் சிறுவர் பாடசாலையின் ஆரம்பத்தில் இருந்து இரண்டு ஆண்டுகள் பாடசாலையின் நிர்வாகத்தில் ஈழத் தமிழர் சங்க நிர்வாகிகளில் ஒருவர் பங்குகொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியளித்தனர். காலப்போக்கில் தமிழ்ச் சிறுவர் பாடசாலையானது விடாமுயச்சியும் கடின உழைப்பும் கொண்ட பெற்றோர்கள், ஆசிரியர்களாலும் ஆர்வமும் ஆக்கத்திறனும் கொண்ட நிர்வாகிகளாலும் தனித்துவத்தோடு அன்றிலிருந்து இன்றுவரை இயங்கிவருகின்றது.

ஜனநாயக முறைப்படி பொதுச்சபையால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நிர்வாகத்தின் நெறிப்படுத்துதலின் கீழ் **" அமிழ்தினும் இனிய தமிழ்மொழி காப்போம் "** என்ற விருது வாக்கியத்துடன் பாடசாலைக்கீதம், தனித்துவமான சின்னத்தினையும் கொண்டு இன்று பதினைந்தாம் ஆண்டில் சொந்தக்கொடியுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்பதில் எமக்கொரு பெருமையுண்டு.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக சிறுவர்களுக்கு தமிழறிவை மட்டுமன்றி இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் பயிற்ச்சி அளிக்கப்படுகின்றது என்றால் மிகையாகாது. அரசியல்ரீதியாகவோ, மதரீதியாகவோ, மொழிரீதியாகவோ வேறுபாடுகளின்றி தமிழ் இளம் சிறார்கள் நல்லதொரு சமூகத்தினை உருவாக்க வழிவகுத்துள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ⟶





இந்நிலையம் சிலபல தடைகளைத் தாண்டி இன்று கம்பீரமாக பதினைந்தாம் ஆண்டினை மனமகிழ்வோடு கொண்டாடுகின்றது. இவ்வேளையிலே தமது பொன்னான நேரத்தை தாய்மொழிக்கல்வியிலும் கலைவளர்ச்சியிலும் மட்டுமல்லாது மானிடத்திறனிலும் சிறுவர்களுக்குத் தாகம் ஏற்படும் வண்ணம் அறிவூட்டும் ஆசிரியர்கள், தமிழராய் தலை நிமிரவேண்டும் என உணர்ந்து ஆசிரியர்களுடன் ஆர்வத்துடன் சேர்ந்தியங்கும் பெற்றோர்கள், இவர்களைத்தெளிவுடன் இணைத்தியங்கும் நிர்வாகிகள், மூத்தோர், மூதாதையர், அறிஞ்ஞர்களால் வளர்த்த தமிழை, கலையை நாங்களும் காப்போம் எனக் களமிறங்கி சவால் விடும் தமிழ்ச் சிறுவர் பாடசாலையின் மாணவ மாணவிகள் அனைவரும் பாராட்டுதற்குரியவர்களே.

இவர்களனைவரிற்கும் நன்றிகள் பல கூறுவதுடன் மேலும் பாடசாலையின் வளர்ச்சியில் மேன்மேலும பங்களிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். பதினைந்தாம் ஆண்டு நிறைவினை களிப்புடன் கொண்டாடி மகிழும் நாம் தொடர்ந்தும் பல பொன் விழாக்களை உவகையுடன் கொண்டாட தொடர்ந்தும் உனை வாழ்த்துகின்றோம்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்

# இன்றும்

# Om oss

Katolsk prest Iruthayanathans engasjement for tamilsk undervisning bidro til hans etablering av tamilsk lørdagsskole i St. Svithun menighetslokale i Stavanger. Etter dette påbegynte prosjektet ble det vekket interesse for en opprettelse av et tamilsk aktivitetssenter.

Med stor entusiasme sørget medlemmene i "Eelam Tamilenes Forening i Rogaland" for grunnleggelsen av Tamilsk barne- og ungdomsaktivitetssenter i året 1992.

Organisasjon hadde som mål å gi tamilske barn kunnskaper om deres egen kultur og identitet. Samtidig med at den norske kultur og dens sosiale liv, likestilles. Å lære og beherske det tamilske språket, forble et viktig element i å utvikle barnas evne til å kommunisere / skape et fellesskap mellom tamilske barn i Norge og slektninger i Sri Lanka.

I den siste tiden har organisasjon utvidet sine aktiviteter med leksehjelp , idrett, temakvelder og har tilrettlagt barnas sammenkomster med den tamilske kulturens tre prinsippelementer som musikk, dans og drama.

Organisasjonsstyret ble valgt, på et demokratisk grunnlag, av alle foreldrene. Nøytralitetsprinsippet ble vektlagt både på et politisk, religiøst og språklig grunnlag. Hvert medlem er viktig og utgjør en forskjell. Samhandling, samarbeid og forståelse, fungerer som en nøkkel til organisasjonens målrettede og vellykkede utvikling. ⟶





Tamilsk barne- og ungdomsaktivitetssenter har gjennomgått mange hindringer og feirer i dag 15- års jubileum med stor stolthet. Elevenes engasjement, frivilliges harde arbeid, støtte fra Rogaland Fylkeskommune og bruken av skolelokaler ved Gautesete Skole, har bidratt til denne suksessen.

Foreldrene har bistått og bidratt med et aktivt støttende arbeid sammen med lærerne og organisasjonsstyret . Til alle medlemmene kan vi ikke få uttrykt nok, hvor viktig arbeidet er som de har utført og som en brobygger mellom det norske og det tamilske miljøet.

Tamilske verdier, kulturen og språket er utviklet og bevart. Vi skal beskytte og bringe dette videre til neste generasjon, sier de nye generasjoner. Barnas teoretiske / praktiske utvikling og ferdigheter, har soleklart ført til stor glede blant foreldregenerasjonen.

Mens vi uttrykker en stor takknemlighet til alle som har bistått og bidratt , oppfordrers også alle til å støtte organisasjons videre utvikling.

Å bevare den tamilske identiteten og samtidig være en del av det norske samfunnet, har vært drivkraften i organisasjonen. Den har lykkes med sitt mål.

Vi benytter denne anledningen til å gratulere hjerteligst med 15 års-jubileet for Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter.



**Nivå**

**Barn 1**

## ஆரம்பப்பிரிவு



தோமாசன் செபஸ்ரியன்



அன்னிக்கா சின்னத்துரை

அரும்பு



யுஸ்ரின் தோமஸ்



வெறிற்ரி தேவசகாயம்

யாழினிது குழலினிது என்பர் எம் போன்ற மழலைகள் சொற்கேளார்.

எமது மழலை மொழியிலே பாடல்கள் பல பழகி, கதைகள் பல கேட்டு, மன மகிழ்வுடன் அங்கும் இங்கும் ஓடியாடி விளையாட களமமைத்த இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலையே நீ பதினைந்தாவது அகவையைத் கடக்கும் இவவேளையில் வாழ்த்துகின்றோம் சிறார்கள் நாமும்.




**Nivå**

**Barn 2**

# சிறுவர்பிரிவு


சில்வியா மார்க்கோ


றோகித் பாலசுப்ரமணியம்


பிரசன்னா சர்மா


ஷ்ரீபன் மார்க்கோ

அரும்பு

மழலைகள் நாம் பேசும் பேச்சைக் கேட்டு நம் சுற்றத்தவர்கள் அகமகிழ தாய் மொழியாம் தமிழில் பேசிப் பழகுதல் அவசியம். அத்துடன் நாம் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கவும், நம் முன்னோரின் கலை, கலாச்சாரப் பண்பாடுகளை அறிந்து ஏனைய நாட்டவருக்கும் தமிழின் புகழைப் பரப்ப தாய் மொழியைக் கற்றல் அவசியமாகும்.

இவை எல்லாவற்றிலும் முக்கியமாக நாம் நம் உற்றார் உறவினர்களுடன் தொடர்புப் பாலத்தை பலப்படுத்த தமிழில் பேசக் கற்றல் மிக முக்கியமாக விளங்குகிறது.

எமக்கு இந்த தமிழ்க்கல்வியை கற்க வாய்ப்பளிக்கும் இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலையின் பதினைந்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதில் நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.


நிஷாந் கோபாலசிங்கம்


சுவாதி சூசைப்பிள்ளை


கபிஷன் சின்னத்துரை


ருசிகா வரதராஜன்


பிரியங்கா கிரிதரன்



**Nivå** **1**

# 1





அருண் அந்தோனிப்பிள்ளை



நிதுசன் சின்னத்துரை



அவிநாஸ் பாலசங்கர்



அபிராமி உதயமூர்த்தி

நாம் தமிழர்கள். நாம் முதலில் பேசும் மொழி தமிழ். முதலில் எழுதும் மொழி, முதலில் பாடல்களைப் பாடும் மொழி, எம்மை சுற்றி நடப்பவற்றை முதலில் கேட்கும் மொழி தமிழ் மொழியே. இதுவே எமது தாய் மொழி.

நாம் இங்கு பிறந்து வேற்று மொழிகள் கற்று மற்றைய கலாச்சாரங்களுடன் சேர்ந்து வாழ்ந்தாலும், எமது தாய்மொழியாம் தமிழை பேணிக்காத்துக் கொள்ளல் வேண்டும். ஆகவே நாம் கற்க, பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக விடாமுயற்சியுடன் செயற்பட்டு இன்று பதினைந்தாவது நிறைவாண்டை கொண்டாடும் எமது இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலையை வாழ்த்தி வணங்குகின்றோம்.



Nivå 2



# 2



ஸ்ரேபானி றாஜேஸ்வரன்



மதுசாந்த் கோபாலசிங்கம்



அர்ச்சனா சர்மா



சாருஜா காண்டீபன்



லச்சிகா வரதராஜன்

நாங்கள் ஐந்து மாணவர்கள் இவ் வகுப்பில் படித்து வருகின்றோம். நாம் தமிழ்ப் பாடசாலைக்கு வருவதன் மூலம் தமிழ் நண்பர்களைச் சந்தித்து தமிழில் உரையாடி விளையாடுகின்றோம். அத்துடன் தமிழ் எழுத்துக்களை இனங்கண்டு, உரத்துவாசித்து, தமிழ்ப்பயிற்சிகள் செய்வதும் எமக்கு பிடித்த செயல்.

இதனால் எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியை நாம் சிறிய வயதிலேயே எழுதி வாசிக்கக் கற்கின்றோம். தமிழ்க் கலாச்சார விழாக்களில் நடனங்கள் ஆடுவதும், பாடல்கள் பாடுவதன் மூலமும் எமது கலாச்சாரத்தை அறிந்து கொள்ள இலகுவாக உள்ளது.

இதற்கு உறுதுணையாக இருந்து வருவது எமது இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலையே. இப் பாடசாலை தன் பதினைந்தாவது ஆண்டினை நிறைவு செய்யும் இவ்வேளையில் சிறுவர்கள் நாமும் வாழ்த்துகின்றோம்.



Nivå 3

# 3



கமிலா மரியநாயகம்



விரோஷன் உதயமூர்த்தி





ஜொய்சன் தோமஸ்



கத்லீன மரியநாயகம்

தமிழ் மொழியை நாங்கள் வீட்டில் எங்களது பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் தமிழ் நண்பர்களுடனும் கதைப்பதற்கு உபயோகப்படுத்துகின்றோம்.

நாங்கள் இலங்கையில் உள்ள சொந்தங்களுடனும், ஐரோப்பாவில் வாழும் உறவினர்கள் நண்பர்களுடனும் உறவாடி மகிழ தமிழ் மொழி அவசியமானதாகும்.

நாங்கள் நோர்வேயிலே பிறந்து வாழ்வதாலும், அமைதியான சூழலில் கல்வி கற்பதாலும் எமக்கு நோர்வேஜிய மொழி அவசியமானதாகும். நாங்கள் ஓய்வு நேரங்களில் வெவ்வேறு விளையாட்டுக் கழகங்களில் கலந்து கொண்டு நோர்வேஜிய நண்பர்களுடன் இணைந்து வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளவும் நோர்வேஜிய மொழி முக்கியமான தொன்றாகும்.

நமது தாய்மொழியினையும் கலைகளையும் கவனத்துடன் எமக்குக் கற்றுத்தரும் இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை பதினைந்தாவது அகவையை கொண்டாடும் இவ்வேளையில் முன்றாம் ஆண்டு மாணவர்களாகிய நாங்களும் வாழ்த்துகின்றோம்.



வருனிக்கா கிரிதரன்



சாருமதி சுசைப்பிள்ளை



நிலா சிறீதரன்



**Nivå** **4**

# 4



கீர்த்தனா பாலசங்கர்



சந்துசன் சின்னத்துரை



மெதுசியா சிறீதரன்

அரும்பு



ராகவன் ஜீவாகரன்



லக்சியா பாலசுப்ரமணியம்

பனிமலையில் மலர்ந்த மலர்கள் நாம் எமக்கு சிந்தைக்கு இனிய, செவிக்கு இனிய, வாய்க்கு இனியனவாயும், வந்த இருவினைக்கு மாமருந்தாம், முந்திய நன்நெறி நாம் அறிய நாப்புலமையை தமிழில் எமக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றது எம் தமிழ்ச் சிறுவர் பாடசாலை.

இப்பூகோளத்தில் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கும் எம் இரத்தபந்தங்களுடன் பாசத்துடன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள தமிழ்மொழியன்றி வேறொன்றுமில்லை எமக்கு.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிய மொழி பாரினிலே வேறொன்றில்லை" என்றார் பல மொழியறிந்த மகாகவி பாரதியார்.

இவ்வினிய மொழியை எளிதாய் எமக்களிக்கும் இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலை பதினைந்து ஆண்டுகள் அல்ல, எம் இனம் வாழும் வரை சிறப்பாக வளரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.



அபினயா அயிலன்



மதுசியா சிறீதரன்



இந்துசா வரதராஜன்



பிரகாஸ் தேவசகாயம்



**Nivå 6**

# 6




கெவிந் பாலசுப்ரமணியம்



பிரியங்கா செபஸ்ரியன்





ஜனார்த்தன் தோமஸ்



கீர்த்திகா சின்னத்துரை

தேசம் விட்டு தேசம் கடந்து வந்தாலும் எமது நாட்டினையும் எம்மையும் அமுதான தமிழ் மொழியை அழகான முறையில் ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஆசையுடன் கற்க வரும் அஞ்சுகங்கள் நாம். ஆழ்கடலில் முத்துக்குளிப்பது போல் தமிழ் எனும் முத்தைத் தேடி எமது பாதை தொடர்கின்றது. இப்படியாக எம்மை முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட வைக்கும் எமது தமிழ்ச் சிறுவர் பாடசாலையை எண்ணிப் பெருமைப்படுகின்றோம்.

மாணவச் செல்வங்களாகிய எமது பிறந்தநாளை கொண்டி மகிழும் தாயானவள் எமது பாடசாலை. இன்று தனது பதினைந்தாவது பிறந்தநாளை நாம் அனைவரும் கொண்டாடி மகிழவைத்து, தானும் அந்த மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி பேரானந்தம் அடைகின்றது. இத்தனை வளங்களும் நிறைந்த எமது இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலைக்கு எமது ஆசிரியர்களும் மாணவர்களாகிய நாமும் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



காயா தியோப்பிலஸ்



ஜீனா மயில்வாகனம்



**Nivå** **10**

# 10




காயத்திரி ஜீவாகரன்



கிரிசாந்த் தேவசகாயம்

அரும்பு



ஜெயப்பிரியன் செபஸ்ரியன்

பலதும் பயில விரும்பும் பத்தாம் வகுப்பு மாணவர்கள் நாம். தமிழ் மொழியின் அவசியம், தமிழர் பண்பாட்டின் அடையாளங்கள், மாற்று கலாச்சாரத்துக்கு முகம் கொடுத்தல், இவை போன்ற சிந்தனைகளுடன், அதற்கான தேடலைத் தொடங்கும் மாணவர்கள் நாம்.

தமிழை பாடநூற்களுடாக மட்டுமின்றி, கருத்தாடல்கள், கலைநிகழ்வுகள் ஊடாக கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் இனி மெல்லென சாகாது என்பதற்கு, புலத்தில் நம்பிக்கையூட்ட உறுதுணையாக இருந்துவந்து இன்று பதினைந்தாவது ஆண்டினைக் கடக்கும் எமது இஸ்ரவங்கர் தமிழ்ச் சிறுவர் பாடசாலையைப் பூரிப்புடன் வாழ்த்துகின்றோம்.



கஸ்தூரி ஜீவாகரன்



தாரணி செபஸ்ரியன்

# Leksehjelp


Angelo Welmillage


Dilki Welmillage

For å sikre barns fremtid på en best mulig måte pågår det ekstra-undervisning og leksehjelp i de to teoretiske fagene matematikk og engelsk.

Dette tilbudet er populært blant de fleste og har blitt godt mottatt.

Vi er svært takknemlige overfor de erfarne lærerne som stiller opp frivillig. Samtidig fortjener Gautesete Skole også en stor takk for godt samarbeid i bruk av deres lokaler.

It is a pleasure helping the Tamil children with the English language at this organization.

In a globalising world, the importance of English language education is increasing. English is becoming an essential language for communication and knowledge gathering.

I wish continued success to the admirable service that this organization is providing.

-Mrs. Joyce Selvakumar
English Teacher





# பாடசாலைக் கீதம்

இராகம் | கல்யாணி

பல்லவி

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி காக்கும்
இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை வாழியவே
மகிழ்வுடன் அன்னை மொழிதனை பயிலும்
இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை வாழியவே

சரணம்

இரு கரங்கள்போல் தமிழும் நொச்க்கும்
இணைந்தே இயங்குவோம் நாங்கள் இங்கே
வரும் காலத்திலும் வாழ்ந்திடத் தமிழை
வளர்க்கும் பணியை செய்வோம் இங்கே
கரும்பாய் இனிக்கும் எம் கலைகளை
கருத்துடன் நாமும் கற்பதும் நன்றே
அரும்புகள் எங்கள் உறவுகள் வாழும்
அன்னை மண்ணுக்கு உதவியும் செய்தே

எண்ணெய் வளம்மிகு நோர்வே நாட்டில்
எண்ணும் எழுத்தும் கண் எனக் கற்போம்
நுண்ணிய தொழில்நுட்ப மேம்படு அறிவு
பண்ணிய பயன் யாவும் தமிழுக்கும் தருவோம்
திண்ணிய அறநெறி உரைக்கும் ஆசான்
கண்ணிய அறிவுரை கேட்டு இங்கே நடப்போம்
மண்ணில் மாந்தர் அனைவரும் சரிசமன்
எண்ணியே ஒற்றுமை காத்திங்கு வாழ்வோம்

# ஆசிரியர்கள்



ஜீவாகரன்
அருளாநந்தம்



செபஸ்ரியன்
தோமஸ்



மேரி மக்டலீனா
செபஸ்ரியன்



சந்திரகலா
சர்மா



நிர்மலினி
உதயமூர்த்தி



தர்சினி ஆன்
சிறீதரன்



சர்மா
அருளானந்தம்



கொலஸ்ரிக்கா
தோமஸ்







அந்தனி
தியோப்பிலஸ்



காஞ்சனா
பாலசங்கர்



ரமாஸ்
வரதராஜன்



பாலசங்கர்
குலேந்திரன்



அஜந்தா
பரமாநந்தன்



ஜசிந்தா
பாலசுப்ரமணியம்



விமலராணி
ஜீவாகரன்



ஜொய்ஸ்
செல்வக்குமார்

# Lærerne

# புலம்பெயர் சிறாரின் தமிழ்மொழிக் கல்வி

பாவலர் கந்தையா இராஜமனோகரன்

தாய்மொழிக் கல்வி தமது பிள்ளைகளினுடைய வருங்காலப் பொருளாதாரக் கல்வியைச் சிதைத்துவிடும் என்பது எம்மவர் பலருடைய அசையாத நம்பிக்கை. இதற்கான காரணங்கள் பல. அடிப்படையாக அமையும் காரணம் தமிழ்ப் பெற்றோரின் அறிவின்மையே. இவ்வறிவின்மை காரணமாகப் பிழையான நம்பிக்கைகள் பல எம் மனதிலே ஆழமாகப் பதிந்துள்ளன.

- வாழும் நாட்டின் மொழியிலே எவரெனினும் நல்ல பாண்டித்தியம் பெற வேண்டும். அதனைப் பிழை என்பதே பிழை. ஆனால் அதற்காகத் தமிழைப் புறக்கணிப்பதும் அதே அளவு பிழை. சில பெற்றோர் தமிழ் மொழியை வீட்டிலே பேசுவது பிள்ளைகளின் வாழும் நாட்டு மொழியறிவைக் குறைத்துவிடும் என நம்புகின்றனர்.

- நாம் பல்லாண்டுகால அடிமைத்தளையிலே இருந்தவர்கள். இறுதியாக எம்மை ஆண்டவர்கள் ஆங்கிலேயர். ஆங்கிலம் கற்றாலே அரச வேலையும் உயர் சம்பளமும் என்று அனுபவித்தவர்கள். இம்மனநிலை பின்னர் ஆழப் பதிந்த நம்பிக்கை ஆகிவிட்டது. தமிழ் சோறு போடுமா? என்று ஏளனஞ் செய்தவர்களே நாம். ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்ட பின்னர் எமக்கென ஓர் அரசு அமைந்திருப்பின் நிலைமை சீராகியிருக்கும். நாமோ சிங்களவருக்கு அடிமைப்பட்டோம். அருகே பெயரளவுக்குத் தமிழ் நாடு என உதித்த இந்தியத் தமிழக மக்களோ எம்மிலும் கீழ்நிலைக்குச் சென்றார்கள். ஆள்பவர் மொழியான இந்தி மீதும் ஆண்டவன் மொழியான ஆங்கிலம் மீதும் புரியாத மொழியான வடமொழி மீதும் அளவிலாக் காதல். இம் மொழிகளே வாழ்வை மேம்படுத்தும் என்ற பிழையான தன்னையே உணராத நம்பிக்கை

- அடிமைத் தளையின் பின்னர் பணத்தை முதலாக வைத்தே மனிதரை மதிக்கத் தொடங்கினோம். இதனாலே பணமுழைக்கும் கல்வியே பெரியதாகியது. வாழ்வியல் அறிவைத் தருவன ஏளனத்திற்கு ஏதுவாகின. நிரந்தரமான நல்ல தொழிலைத் தரும் துறைக்கே சமுதாயமும் மயங்கியது. இது தன்னையே நம்பாத நம்பிக்கை.

இன்று விளங்கியோ விளங்காமலோ நாம் விஞ்ஞானத்தை மட்டுமே ஏற்கின்றோம். அதே விஞ்ஞானம் - அறிவியல் - தாய்மொழிக் கல்வி மிகவும் அவசியமானது என்கின்றது. எந்தப் பிள்ளையினதும் பரந்துபட்ட அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழி கட்டாயமாகின்றது. இதற்கான அடிப்படைக் காரணம் சிக்கலான ஒன்றல்ல. →





எந்தப் பிள்ளைக்கும் தொடக்க ஆசிரியர் தாயே. முதற் குருவான தாயோடு பின்னர் தந்தையும் இணைகிறான். பின்னர் தந்தையோடு பலவிதமான ஆசிரியர்கள் இணைகிறார்கள். அதன்பின் அவரவர் மேற்படிப்புக்கு ஏற்பப் பலரும் அமைகின்றனர். இறுதியாக, முழுப் பிறப்புகளினதும் நிறைவாகவே, பரம்பொருளான இறைவனே குருவாக வருகின்றான். தொடக்கத்திலே குருவாக இருக்கும் தாய்க்கும் தந்தைக்கும் சரளமாகத் தெரிந்த மொழியிலே பிள்ளையும் அறிவு பெற்றாலே நற்கல்வி சாத்தியமாகும். ஒவ்வொருவரினதும் வாழ்நாட்களின் தொடக்கத்திலும் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது பெற்றோர் மட்டுமே குரு. இவ்வாறான ஆசிரிய மாணவ உறவு மேம்படத் தாய்மொழியைவிட வேறெந்த மொழி இலகுவாக அமைய முடியும்! மேலும் பிஞ்சுப் பருவத்திலே கற்பவை நிலைப்பதும் உறுதியல்லவா!

இவ்வளவு இலகுவாக அமையும் காரணத்திலே ஒரு சிக்கலும் உண்டு. இடையிலே ஒரு சந்ததி தனது தாய்மொழியை இழந்துவிட்டால் அடுத்த சந்ததிக்கு நிலைமை பாரதூரமானதே. அவர்களின் பிள்ளைகளுக்கு வேற்றுமொழியே இலகுவானது ஆகிவிடும். இதனாலேயே இடையிலே எவராயினும் தனது தாய்மொழியை இழத்தல் ஆகாது. அவ்வாறு இழந்தால் முழுமையாக அறுபட வாய்ப்புண்டு.

ஏனைய மொழிகளோடு பார்க்கையிலே தமிழர்க்குத் தனித்துவமான பல சிக்கல்கள் உள்ளன. அடிமைத்தளையிலே நானூறு ஆண்டுகள் வாழ்ந்தவர் நாம். எனவே, எல்லை கடந்த ஆங்கில மோகம் இருக்கின்றது. மேலைநாட்டு வாழ்வின் மீதான கவர்ச்சிக்கு அளவே இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னரே தமிழோடு கலக்கத் தொடங்கிய வடமொழி மீதான மயக்கமும் தீர்ந்தபாடு இல்லை. கடவுள் ஒன்று. கடவுளுக்கு மதம், மொழி என்பன இல்லை என்ற ஞானமும் இல்லை. இவற்றுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் உண்டு.

தனக்கென நாடில்லாத இனத்தவர் எவராகினும் இவ்வாறு தான் இருப்பர். நாடில்லாத மொழி, பண்பாடு என்பன அழிந்துவிடும். இனி அந்த அச்சம் இல்லை. நாம் திருந்த வேண்டிய காலம் வந்துவிட்டது. காரணம் எவர்க்கும் புரிந்திருக்கும். ஈழத்தின் விடியலிலே நிற்கின்றோம். நன்றாக விடியும் முன்னர் பிள்ளைகளைத் தமிழிலே வல்லவர் ஆக்குவோம். →

அதற்கான காரணங்கள் பல:

- முதலிலே கூறப்பட்ட தாய்மொழிக் கல்வி தொடர்பான சிறப்பு.

- நாம் இன்று உலகளாவி வாழும் இனம். நாளைக்கு இவர்கள் சந்திக்கும்போது ஒரு பொது மொழி தேவை. பிள்ளைகளின் உறவினர் பலர் ஆங்கில அறிவில்லாத நாடுகளிலேயும் வாழ்கின்றனர். எமது பொதுமொழியாகத் தாய் மொழி அமைவது சிறப்பு அல்லவா.

- நாளைக்கு நாம் தாய்நாட்டிலே சந்திக்கும்போது கட்டாயம் தமிழ்மொழிப் பயன்பாடு அவசியமாகின்றது.

- எந்தப் பிள்ளையும் ஓரளவு வளர்ந்த நிலையிலே அதாவது பதினைந்து அகவையின் மேல் தனது தாய் மொழி அறிவின்மையை மிகுந்த குறைபாடாகவே கருதும். இதனை அந்தப் பிள்ளைகளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். எனவே, பெற்றோராகிய நாம் குற்றவாளிகள் ஆகக்கூடாது.

- இறுதியாகச் சைவப் பெற்றோருக்கு ஒன்று. சைவத்திலே மூடநம்பிக்கை பெருகுவதற்குக் காரணம் சைவர் தமது சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து கொள்ளாமையே. சைவத்தைக் கற்பதற்குத் தமிழ்மொழி கட்டாயம் தேவை. சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை. பிரித்தாலோ தமிழ்நாட்டைப்போலே மூடநம்பிக்கை மிகுந்த கூட்டமே பெருகும். வடமொழி மந்திரம் மணிச் சத்தம் போலே. ஓய்ந்தவுடன் கேட்காது. இதனாலே அறிவும் ஏற்படாது. சைவ சமய அறிவுக்குத் தமிழ் தேவை.

இவ்வாறாகப் பல காரணங்களை நாம் கூறலாம்.

அடுத்த கேள்வி ஒன்று உண்டு. எம்மிலே பலர் தமது பிள்ளைகளை ஒழுங்காகத் தமிழ்ப் பள்ளிக்குக் கூட்டிச் செல்கின்றோம். ஆனால், தமிழறிவு எதிர்பார்த்த அளவிலே எல்லோருக்கும் வருவதில்லை. இது பல பெற்றோருக்குக் கவலையுங் கூட.
இதற்கான காரணம் என்ன?
இதனை எவ்வாறு வெற்றி கொள்ளலாம்? ⟶





மொழியறிவு வெறுமனே படிப்பதால் அதுவும் கிழமைக்கு ஒரு நாள் ஓரிரு மணித்தியாலம் கூடிப் படிப்பதனாலே வளரமாட்டாது. இங்கு கவனிக்கப்பட வேண்டியவை பல:

- தமிழைத் தமிழிலே படிக்க வேண்டும். அதாவது தமிழ் வகுப்பிலே எழுதவும் வாசிக்கவும் பேசவும் தமிழ்மொழி மட்டுமே பயன் படுத்தப்பட வேண்டும். தமிழிலே ஒரு சொல் விளங்காதவிடத்து வாழும் நாட்டு மொழியைப் பயன்படுத்துவது மிக இலகுவானது. ஆனால் மிகவும் பிழையானது. தமிழை மட்டுமே பயன்படுத்தி வேண்டுமானால் நடிப்பாற்றலை இணைத்து விளங்க வைப்பதே சரியான முறை.

- இசைத்துறையிலே கற்போர் சுரவரிசைகள், பாட்டுகள் போன்றவற்றைத் தமிழிலே மட்டும் கொடுக்க வேண்டும். இன்று இசை, இசைக் கருவிகள் போன்றவற்றைப் பயிற்றும் ஆசிரியர் பலரும் இதனைச் செய்வதே இல்லை. இது உண்மையிலே தெய்வக் குற்றம். தாய்மொழியை அவமதித்தல் பாவம். எமது கலைகளையும் இசையையும் கற்கும்போதும் எமது தாய்மொழி பயன்படாவிட்டால் வேறு எப்போ அது பயன்படப் போகின்றது?

- வீட்டிலே பேசும் மொழியாகத் தமிழ் மட்டுமே இருக்க வேண்டும். அதிகமான பெற்றோர் மிகவும் பெருமையாகக் கூறுவர்... தமது பிள்ளைகளுக்குத் தமிழ் விளங்கும் ஆனால், பேச வராது என்று. இது மிகுந்த கவலைக்குரியது. இதிலே பெருமைப்பட ஏதுமே இல்லை. பெற்றோர் மட்டுமல்லாமற் பிள்ளைகளும் தமிழிலே பேச வேண்டும். அன்றாடப் புதினங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், சமையலறை, வீட்டுத்தோட்டம் போன்ற இடங்களிலான கருத்துப் பகிர்வுகள் யாவுமே தமிழிலேயே அமைய வேண்டும்.

- பெற்றோர் மட்டுமல்லாமல் பேரன்மார், பேர்த்திமார், மாமன்மார், மாமிமார், சிற்றன்னைமார், சிற்றப்பன்மார் ஆகியோரும் பிள்ளைகளோடு தமிழிலே பேச வேண்டும். தமது ஆங்கிலத்தை மெருகூட்டுவதற்காக வருங்காலத் தமிழ்ச் சிறாரின் வாழ்வைச் சிதைக்கக் கூடாது. இது தன்னலங் கருதிய தன்மையாகும். ⟶

## புலம்பெயர் சிறாரின் தமிழ்மொழிக் கல்வி

- தமிழ்ப் பள்ளிகள், கோயில்கள் போன்ற தமிழர்கூடும் இடங்களிலாவது தமிழுக்கு முழு அளவிலான இடம் கொடுக்கப்படவேண்டும்.
- இசை, நடனத் துறைகளிலான அரங்கேற்ற நிகழ்வுகளிலே தமிழுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். தமிழை முற்றாகப் புறக்கணிப்பது பெற்ற தாயைப் புறக்கணிப்பதாகும்.
- தமிழிலே ஏதாவது சிறு கதைகள், கவிதைகள், ஆகக் குறைந்தது விளம்பரங்களையாவது வாசிக்க வேண்டும்.
- தமிழிலே சிறு மடல்கள், கவிதைகள், கட்டுரைகள் போன்ற எவற்றையாவது எழுத முயல வேண்டும்.
- திரைப்படப் பாடல்களிலே எத்தனையோ நல்ல பாடல்கள் உள்ளன. அவற்றைப் பாட முயற்சிக்க வேண்டும்.
- எம்மதத்தினராயினும் தத்தமது வழிபாட்டை வீட்டிலும் வெளியிலும் கோயில்களிலும் தமிழிலே இயற்ற வேண்டும்.

தமிழர் தமிழை மதித்தால்
தமிழரைத் தரணி மதிக்கும்.

- பாவலர் கந்தையா இராஜமனோகரன்





## தமிழ்க் கலாச்சாரம் நோர்வேயில் நீடிக்குமா?

நோர்வேயின் பல நகரங்களில் பல தமிழ் அமைப்புகள், பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்கள் முதலாவது தலைமுறை புலம்பெயந்தவர்கள் தமது கலாச்சாரத்தை பேணுவதற்கும் அதை அடுத்த சந்ததிக்கு அறிமுகப்படுத்துவதற்கும் ஓர் தளமாக அமைகின்றன.

இரண்டாவது, மூன்றாவது தலைமுறைச் தமிழ்ச்சமுதாயம் தமிழ்க் கலாச்சாரத்தை கடைப்பிடிக்குமா என்பது பெரிய கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. காலப்போக்கில் எமது கலாச்சாரம் மங்கிப்போகும் என்பதுதான் எனது கவலைக்குரிய தனிப்பட்ட கருத்து.

இதற்கு பலவிதமான காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, இலங்கை சுமராக 450 ஆண்டுகளாக மேற்கத்தைய நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்தமையால் நாம் இலகுவாக மேற்கத்தைய கலாச்சாரத்தை சுவீகரித்துக் கொள்கிறோம். அடுத்ததாக தமிழ்க்கலாச்சாரம் இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. இங்கு முறையான இந்துக் கோவில்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இதனால் தமிழர்கள் சமய சடங்குகளில் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை.

நோர்வேயில் தமிழர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையிலானவர்களே ஒவ்வொரு நகரங்களிலும் வாழ்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு கலாச்சார, சமய நிகழ்வுகளை நடத்துவது அவ்வளவு இலகுவான விடயமல்ல. அத்துடன் நோர்வேயில் அதுவும் ஸ்ரவங்கரில் எமது பாரம்பரிய இசையை, நடனத்தை பயிற்றுவிப்பவர்கள் மிக மிக குறைவானவர்களே உள்ளார்கள்.

எமது கலாச்சாரம் கூட்டுக் குடும்பங்களூடாக அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. நோர்வேயிலிருக்கும் இளைய தலைமுறைக்கு இந்த சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் சாத்தியமற்றவை. நோர்வேயில் வாழும் தமிழ்க்குழந்தைகள் தமக்கிடையே நோர்வே மொழியிலேயே பேசுகிறார்கள் இதுவும் கூட தமிழ்மொழிப் பாவனை குறைவிற்கு காரணமாக உள்ளது.

நான் தமிழ்க் கலாச்சாரத்தில் வாழ்கின்றபடியால் அதில் நல்ல விடயங்களை அறிந்து உள்ளேன். இன்னும் சில பத்தாண்டுகளில் எமது கலாச்சார பண்புகள் அழிந்துபோனாலும் சிலவற்றையாவது எம்மால் பேணிப் பாதுகாக்கப்படும் என்றே நான் நம்புகின்றேன். நோர்வேயில் வாழும் இளைஞர்கள் நோர்வே கலாச்சாரத்தில் உள்ள நல்ல விடையங்களையும் எடுத்துக்கொண்டு, தமிழ்க்கலாச்சாரத்தில் உள்ள நல்ல விடையங்களையும் எடுத்துக் கொண்டு தமிழ்க் கலாச்சாரம் அழியாமல் அதனை காப்பாற்ற வேண்டும் என்பதே எனது அவா.

**- காயத்திரி ஜீவாகரன்**
**மாணவி**



# Har jeg noen gang vært diskriminert

Hva er egentlig diskriminering?

Jo diskriminering er det samme som usaklig forskjellsbehandling. det vil si å behandle en part dårligere enn en annen på grunn av personens trosbekjennelse, rase, hudfarge, nasjonale eller etniske opprinnelse, kjønn, leveform eller politisk orientering.

Det er diskriminering blant mennesker over hele verden, og det er ikke et unntak at det er diskriminering i Norge. Men jeg vil si at vi har færre diskrimineringsepisoder som har fått media -oppmerksomhet i Norge, enn i mange andre land hvor diskriminering er en del av hverdagen. Det norske samfunnet er mer oppmerksom på hva diskriminering er og hvordan man takler slike forhold enn mange andre land. Norge regnes jo som et av verdens beste land å bo i. Det er jo jeg også veldig enig i, men det vil jo alltid være noen form for diskriminering her i landet også.

Ja, jeg har opplevd diskriminering for rasen min og for den rare "brunfargen" jeg har.

Da jeg gikk i barnehagen, opplevde jeg at folk kalte meg for ulike ting som jeg ikke burde høre.
Når jeg gikk i ungdomskolen opplevde jeg faktisk diskriminering, men det var jo bare noen som ikke visste bedre. De fleste ungdommene ser på meg som en av dem selv og som et menneske.

Jeg vil si at jeg har opplevd diskriminering i mindre grad, enn de fleste i andre land.
Norge er et fantastisk sted å bo og vokse opp i .
Jeg er stolt over å være tamil i Norge.

- Jeyaprian Sebastian
elev







# தமிழ் மொழியறிவால் நமது எதிர்காலம் வளம் பெறும்

எனது முதல் மொழியாகத் தமிழ் மொழி மூலமே அம்மா, அப்பா, சகோதரர்களுடன் உறவாடினேன். எனது தேவைகளை, எண்ணங்களை வெளிப்படுத்தியதும் தமிழிலே தான். தமிழ் மொழி மூலமான அறிவும் அனுபவமும் இலகுவிலே நோர்வேஜிய மொழியினைப்பயில எனக்கு வழிவகுத்தது.

பாலர் பள்ளி முடித்து சிறுவர் பாடசாலை செல்லும் வேளைகளிலும் நான் தமிழிலே சிந்தனை செய்தேன். இரண்டாம் ஆண்டிற்குப் பின்னர் எனது சிந்தனை மொழி நோர்வேஜிய மொழியாக மாற்றமடைந்தது. நான் தொடர்ந்தும் தமிழ்மொழியினை கதைத்து, எழுதி, வாசித்து வந்தேன். தமிழைப் படிப்பதனால் வேற்று மொழியறிவு, புத்தகப்படிப்பு குன்றிவிடும் என பல தமிழ்ப் பெரியோர் எண்ணுவதை எனது அனுபவத்தின் ஊடாக நிராகரிக்கின்றேன்.

நோர்வேயிலே பிறந்து வளரும் நமக்கு நமது அடையாளத்தினை நிலை நிறுத்த, தன்னம்பிக்கையை வளப்படுத்த தமிழறிவு முக்கியமானதாகும். நாம் படித்து எப்படி விசுவாசமாக உழைத்தாலும் நிறுவன தலைமைகளுக்கு செல்லமுடியாது என்பதும், இருக்கும் பதவியில் நின்றுபிடிக்கக் கடுமையாக உழைக்க வேண்டும் என்பதும் தொழிலனுபவம் கொண்டவர்கள் கூறும் உண்மை.

இவ்வுண்மைகளை அனுபவரீதியாக நாம் உணரும் வேளையில் விரகத்தியின் விளிம்பிற்கே செல்லும் நிலை உருவாகும். எமது மொழியறிவும் தமிழ் உணர்வும் எமக்கு ஆறுதல் அளித்து எமது அடையாளத்துடன் வாழவைக்கும்.

நோர்வேயிலே தமிழருக்கெனத் தனியிடமுண்டு. திறமையாகப் படிப்பதிலும் படித்த அறிவுடன் சிறப்பாக வேலை செய்வதிலும் மட்டுமன்றி சமூகவாழ்விலும் முன்னேற்றம் கண்டுள்ளனர்.
இவர்களைப் பின்பற்றி நாமும் தமிழறிவுடன் எமது எதிர்காலத்தை ஒளிமயமானதாக்குவோம்.

**- தாரணி செபஸ்ரியன்**
**மாணவி**



# Integrering og jeg

Stadig vekk hører man om integrering av innvandrere på både radio, tv og i aviser. Myndighetene ønsker et samfunn som tar opp i seg mangfoldet i befolkningen og Integrering er et viktig ord i denne sammenhengen. Jeg skal i denne artikkelen beskrive hvordan det å være elev ved Tamilsk Barn og Ungdomsaktivitetssenter og å danse indisk klassisk dans, bidrar til at jeg blir mer integrert i det norske samfunnet.

Først og fremst er det viktig å forstå betydningen av integrering:

> **Integrering** betyr å innlemme en minoritet i samfunnsfellesskapet.
> Det vil si at minoriteten skal delta i en storkultur på
> lik linje med etniske nordmenn, samtidig som minoriteten
> kan praktisere og utvikle sin egen kultur/ identitet.

Innvandrere har rett til å beholde sin kulturelle egenart hvis den ikke gir utslag i handlinger som er i strid med norsk lov.

Folk flest har en tendens til å blande begrepene integrering og assimilering. Det er viktig å skille mellom disse begrepene. Assimilering betyr at en minoritet må oppgi sin egen kultur, sine tradisjoner og sitt levesett og bli en del av majoritetskulturen.

Man blir automatisk innlemmet i samfunnsfellesskapet når du blir født i det samme landet som majoriteten. Vi lærer å delta i den norske storkulturen ettersom flesteparten av dem vi omgir oss med er "norske". Utfordringer er å praktisere og utvikle våres egen kultur og identitet. Jeg syns det er viktig å beholde vår kulturelle egenart, ellers kan vi bli assimilert, noe som ingen finner positivt. ⟶







Noen av faktorene som gjør at jeg blir godt integrert i det norske samfunnet:

- Jeg går på Stavanger Tamilsk barne- og ungdomsaktivitetssenter hvor jeg utvider mine kunnskaper innenfor det tamilske språket. Hvert år deltar jeg på forskjellige kulturelle oppsetninger. Dette bidrar definitivt til utvikling av min egen kultur og forståelse av andre kulturer
- Jeg har de siste 7-8 årene danset "Baratha Natyam" som er en indisk klassisk dans. Denne dansen er også sterkt knyttet til religionen jeg tilhører, hinduismen.
- Jeg har en familie som snakker tamilsk i hjemmet, spiser tamilsk mat og lærer meg viktige tamilske normer og verdier.

Som konklusjon vil jeg si at ved å ha foreldre som lærer meg gode verdier, en organisasjon som denne lærer meg å kommunisere bedre på tamilsk og en danseskole som gir meg en del av den unike tamilske kultur, bidrar til å forstå min egen kultur og identitet.

Disse faktorer gjør at jeg kjenner min egen kultur og identitet, samtidig som jeg er en del av det norske samfunnet.

-Casthory Jeevaharan
elev



# Fotball

Fotball er bare en sport sier mange
Fotball er en lek
Fotball er å springe etter en dum ball
Fotball er farlig
Men det folk ikke vet
Er at det er lidenskap
Fotball er magien i en person
Elleve personer spiller om en trofé
Elleve personer spiller om å lede et lag til topps
Elleve personer representere en nasjon
Elleve personer med magien
Elleve personer ofrer alt de har
Elleve personer gir livet sitt
Elleve personer kjemper
Elleve personer blør og svetter for Klubben
For mange er den dumme ballen livet
Ballen, den magiske ballen skal inn i Mål
Magiske ballen skal føre Klubben til topps
The Champion
Fotball er livet

- Jeyaprian Sebastian
elev









கலையின் அழகியற் கோலங்கள்

Utgitt av

-Elevene
-Lærerne
-Foreldrene

*2007*

**Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter - STAVANGER**

## அமிழ்தினும் இனிய தமிழ்மொழி காப்போம்

Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter
Postboks 1048
4095 STAVANGER

www.stavanger-tamilskole.com

15வது ஆண்டுமலர்
Jubileumsblad-15år